# ஆற்றுப்படை நூல்களில் உளவளத்துணை ஓர் அறிவியல் பார்வை

**கா.சீதாலெட்சுமி,**

**முனைவர் பட்ட ஆய்வு மாணவி,**

**குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக்கல்லூரி, தஞ்சாவூர்.**

**மின்னஞ்சல் முகவரி: kseethalakshmi1987@gmail.com**

14

**ஆய்வுச்சுருக்கம்:**

"காலந்தோறும் தமிழில் அறிவியல்" இதனடிப்படையில் மனநல அறிவியலான வழிகாட்டு உளவியலை மையமாக வைத்து இக்கட்டுரை அமைகிறது. நம் சங்க இலக்கிய ஆற்றுப்படை நூல்களில் உளவத்துணை என்னும் உளவியல் அணுகுமுறை பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தமிழர்களுக்கு கிடைத்துள்ளது. இதில் ஆற்றுப்படை, உளவளத்துணை, உளவளத்துணை ஆலோசகர், இலக்கியத்தில் உளநல ஆலோசகரின் சொற்களின் மாண்பு அனைத்தும் இக்கட்டுரையில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்:** ஆற்றுப்படை, உளவளத்துணை, ஆற்றுதல், கவுன்சலிங் சைக்காலஜி, உளவியலில்

**முன்னுரை**

ஆற்றுதல், ஆற்றுப்படுத்துதல் இச்சொற்கள் இலக்கியத்தில் ஆட்சி செய்யும் விதம் அழகானது. இம்மண்ணுலகில் வாழும் மனிதன் மனம், புத்தி, பணம் இவற்றை முறையாகப் பயன்படுத்தாது தனது வாழ்க்கை முறையில் சிக்கித் தவிக்கின்றான். வறுமை, உறவுநிலை உழைப்பு, உணர்ச்சிகளால் வரும் ஏற்றத்தாழ்வு போன்றவற்றை எதிர்கொள்ளத் தெரியாத நிலையில் அலைகழிக்கப்படுகிறான். இந்நிலையில் ஆற்றுதல் எனப்படும் வழிகாட்டுதல் மனிதனுக்கு அவசியமாகின்றது. இதனை உளவியல் எனற அறிவியல் ரீதியாக விளக்கினால் உளவளத்துணை என்றும் இலக்கியத்தின் வாயிலாக ஆராய்ந்தால் ஆற்றுப்படுத்துதல் என்ற சொற்களாலும் எடுத்தாளப்பட்டுள்ளது. ஆற்றுப்படை நூல்களில் பாடுபொருளாக அமைந்துள்ள உளவளத்துணை என்னும் நடந்ததை அறிவியலை ஆராய்வதே எனது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**இலக்கிய ஆலோசகர்:**

உளவியலில் உளவளத்துணை என்பது கவுன்சலிங் சைக்காலஜி (Counselling Psychology) என்ற அறிவியல் முறையாக அமைகிறது. வழிகாட்டுபவர் பிரச்சனைக்குரியவரின ஆழ்மனக் கருத்துக்களை உள்வாங்கி அவரது சூழல்களையும் செவ்வனே அறிந்து அவர் மூலமாகவே அவரது தனித் திறன்களை மேம்பாடு அடைய செய்து ஆற்றலை வெளிக் கொணர்வது பற்றிய நடத்தை வழிமுறையே[1] இவ்வண்ணமே நம் தமிழ் இலக்கிய ஆசிரியர்கள் காலத்திற்கேற்ப மாறும் மனித சூழல்நிலையால் தனது தடுமாறும் பாதைகளை உற்றுநோக்கி ஆராய்ந்து அவன் பிணைக்கப்பட்டுள்ள இன்னல்களிலிருந்து விடுபட நேர்மறையான வழிமுறைகளை இலக்கியக் கருவாக படைத்திருப்பது பெருமைக்குரியதாகும். இவர்கள் சிறந்த மனநல ஆலோசகர் என்பது தெளிவுகிறது.

**உளவளத்துணையும் ஆற்றுப்படையும்**

உளவளத்துணை என்பது ஆற்றுப்படுத்துதல் வழிகாட்டல் ஆலோசனை வழங்கல் போன்ற பதங்களாலும் அழைக்கப்படுகின்றது. பிரச்சனையுடன் வருபவரை மதித்து ஏற்று, நம்பிக்கையூட்டி தம்மைத் தாமே உணர வைத்து பிரச்சனையே நேர்மறையாக எதிர்கொண்டு வெற்றிக்கு

வழிக்காட்டுவதே சிறந்த உளவளத்துணை எனப்படுகின்றது[2]. இது நடத்தைவாத அணுகுமுறையாகும். மனித நடத்தையானது தூண்டலுக்கும் துலங்களுக்குமான தொடர்பு பற்றியதாக அவ்வணுகுமுறை அமைகிறது. அதனை S.R.Theary எனவும் அழைக்கமுடியம்.[3] இதன் வழி நோக்கும் போது உளவியல் என்ற அறிவியலை அறிய இயலாத நம் சங்ககாலத்தில் ஆற்றுப்படுத்துதல் என்ற சொல்லே பிணி நீக்கும் மருந்தாகக் கருதப்பட்டது.

**"ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்கள் உதவுதல்"** [4]

என்ற நெய்தற்கலிப் பாடல் வரியின் மூலம் ஒரு மனிதனுக்கு உற்ற நேரத்தில் வழிகாட்டுதல் அல்லது உதவுதல் என்பது மிகப் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி வாழ்வை சிறக்கச் செய்யும் என்கிறார் ஆசிரியர் நல்லந்துவனார்.

**ஆற்றுப்படையின் இலக்கணம்**

ஆற்றுப்படுத்தல் என்ற சொல்லானது வழிப்படுத்துதல் , வழியிற் செலுத்துதல் என்ற பொருளைக் குறிப்பதாகும். ஆற்றுப்படை என்ற ஓர் இலக்கிய மரபினை நாம் வேறு எம்மொழியிலும் காண இயலாது. அது தமிழுக்கே உரிய சிறப்பாக அமைந்ததாகும் .

**"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**
**ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்**
**பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்**
**சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்"** [5]

என்று தொல்காப்பியம் ஆற்றுப்டை இலக்கியத்திற்கு இலக்கண வரையரை கூறுகிறது.

விறலியர்,பாணர்,கூத்தர், பெருநர் என்போர் தமது வறுமையைப் போக்க வள்ளல்களிடமோ அரசர்களிடமோ சென்று பொருள் பெறுவது அக்கால வழக்கம். அவ்வாறு பரிசு பெற்றுச் செல்லும் மேற்கூறிய நால் வகைப் பிரிவினருள் ஒருவன் பரிசு பெறச் செல்லும் இன்னொருவனை வழிப்படுத்தும் முறையில் அமைவதே ஆற்றுப்படை ஆகும்.[6] இங்கு அவன் தன் வறுமையைப் போக்க வழி தேடுகிறான் . தன் திறமைக்கு வழிதேடுகிறான்.சீரான மனச் சூழலுக்கும் அதன் வழி வீடுபேறு என்னும் பிறவிப் பயன் அடைவதற்கும் வழிதேடுகிறான். இவ்வாறான மனிதனுக்கு வழி காட்டிக் கொடுப்பதே சிறந்த அறமாக கருதப்பட்டு வந்தது நம் தமிழ் நாகரித்தில் என்றால் அது மிகையல்ல.

**உளவளத்துணை ஆலோசகர்:**

மனிதனானவன் இன்பமும், துன்பமும் நிறைந்த தன் வாழ்வில் மனப் பிரச்சனைகளுக்கு வழி தேடித்தவிக்கின்றான் அவ்வாறு போராட்டங்கள் நிறைந்த மனித மனத்தை நேர் மறையாக எதிர்கொண்டு வழி நடத்துவது என்பது மனநல ஆலோசகருக்கு சவாலான ஒன்றாகும். அவ்வாறு பிரச்சனைக்குரிய மனத்தின் வழித் தூண்டுதல் செய்து துலங்கலை வெளிக் கொணரும் நடத்தைவாத அணுகுமுறையில் உளவளத் துணையாளரின் பணிகுறிப்பிடத்தக்கதாகும் .

மேலும் ஆறறிவு படைத்த மனிதப் பிறவியானது மரபு சூழ்நிலை மதக் கொள்ளகைகள் போன்றவற்றின் அடிப்படையிலேயே வாழத்தொடங்கியது. தான் செய்யும் நன்மை தீமைகளுக்கு இறைவனிடம் அஞ்சி வாழ்வது மனித குணங்களானது. தனது நடத்தையின் விழைவாக இறைவனிடன் பேறு பெற்று வீடுபேற பெறுவதே இப்பிறவியின் பயனாகக் கருதுகிறான்;. இதற்கு இனிதாக வழி

காட்டுகிறார் நம் சங்கப்புலவர் நக்கீரர் ,

**“சேவடி” படருஞ் செம்மல் உள்ளமொடு**
**நலம்புரி கொள்கைப் பும்புரிந் துரையும்**
**செலவுநீ நயந்தனை ஆயின் பலவுடன்**
**நன்னர் நெஞ்சத்து இன்னசைவாய்ப்ப**
**இன்னே பெறுதி நீ முன்னிய வினையே”** [7]

என்ற வரிகளில்' தூய எண்ணங்கள், ஆசை ஒழித்த மனம் நன்மை செய்யும் குறிக்கோளுடன் மெய்ஞானம் உணர்ந்து நல்வழியில் சென்றால் இறைவனது அன்பைப் பெற்று மனிதன் பிறவிப் பயனை அடைய முடியும் என்ற கருத்தை முன் வைத்து மனிதனின் நெறிபிறழ் நடத்தையை மாற்றி நல்வழி படுத்தும் விதமாக ஆசிரியர் இறைவனிடம் ஆற்றுப்படுத்துக்கிறார்.

**இலக்கியத்தில் உளவளத்துணையின் சிறப்பு.**

பரிசு பெற்று தனது மனச்சூழலால் மகிழ்ச்சியில் திளைத்திருக்கும் பொருநன் தன்னைப் போல வருந்தியிருக்கும் மற்றொரு பொருநனை ஆற்றுப்படுத்துகிறான். அவனது மகிழ்ச்சி நிறைந்த உற்சாகமான நடத்தையும், பேச்சும் வருந்தி வந்த பொருநனுக்கு தேன் வந்து பாய்ந்ததைப் போன்று ஆற்றல் அளிக்கிறது.

**ஒன்றியான் பெட்டா அளவையி னொன்றிய**
**கேளிர் போலக் கேள்கொளல் வேண்டி**
**வேளாண் வாயில் வேட்பக் கூறிக்**
**கண்ணிற் காண நண்ணுவழி இரீஇப்**
**பருக வன்ன வருகா நோக்க மோடு**
**உருகு பவைபோ லென்பு குளிர்கொளீஇ** [8]

பொரு படை (73-78)

இப்பாடல் வரிகளில் சோழன் கரிகால் பெருவளத்தான் நட்புக் கொள்வதை விரும்பியவனாக நான் எப்போதும் இரந்து நிற்பதைப் பெரிதும் விரும்புமாறு இனிமையான மொழிகளைப் பேசி என்னை அவனுக்கு அருகே அமர வைத்து அருள் உணர்வுடன் பார்ப்பது என் அன்பு மனத்தினை உருகச் செய்தது என்று கூறிய பொருநனின் அனுபவத்தை தானும் பெற வேண்டும். என்ற தூண்டுதல் வறுமையால் வாடியவனுக்கு வழிகாட்டுகிறது. தானும் தன் திறமையினால் மன்னனைப் புகழ்ந்து பாட வேண்டும் என்ற துலங்களினால் அவன் வாழ்வு வளம் பெறுவதை முடத்தாமக் கண்ணியார் இயல்பாக எடுத்துரைக்கின்றார் மேலும் சிறுபாணாற்றுப்படையில் ,

**. . . . . . . நீயிரும்**
**இவணயந் திருந்த இரும்பேர் ஒக்கல்**
**செம்மல் உள்ளமொடு செல்குவிர் ஆயின்** [9]

(சிறு பாணா -143-145)

என்னும் வரிகளில் நீங்களும் உங்களை விரும்பி இருக்கும் சுற்றத்தினருடன் ஐயம் கொள்ளாமல் நல்லியக் கோடனை அடைந்தால் வளம் பெறுதல் உறுதி என்று நல்லூர் நத்தத்தனார் கூறுவதிலிருந்து மனித வாழ்வில் உளவளத்துணை என்பது சமூக மாற்றத்தை உருவாக்குவதாக

அமைகிறது என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

**சொற்களின் மாண்பு:**

**திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும்**
**பொருளும் அதளினூஉங் கில்** [10] (குறள்-644)

இக்குறளில் கேட்பவரது மனப்பான்மையை அறிந்தே எந்தச் சொல்லையும் சொல்ல வேண்டும் அதுவே சிறந்த அறமாகும் என்ற வள்ளுவர் கூற்றிற்கு ஏற்ப பெரும்பாணாற்றுப்படை பாடல் வரிகள் அமைந்துள்ளன.

**ஒன்னாத் தெய்வ ருலைவிடத் தொழித்த**
**விசும்பு செல் இவுளியொரு பசும்படை தரீஇ**
**அன்றே விடுக்குமவன் பரிசில் இன்சீர்** [11]

பெரும் பாணாற்றுப்படை(491-493)

இப்பாடலில் தொண்டைமான் இளந்திரையனிடம் புகழ்ந்து பாடுகையில் பசுமையான சேனைகளையும் இன்னும் பிற பரிசுகளையும் தந்து நீ சென்ற அந்நாளிலேயே உன் துயர் களைந்து அனுப்புவான் என்று ஆற்றுப்படுத்தும் பெரும்பாணனின் சொற்கள் உளவளத்துணையில் பெரும் பங்கு வகிக்கிறது. இவ்வாறே கூத்தராற்றுப்படையிலும் பெருங்கௌசிகனார்,

**நெடுவெ ணெல்லின் அரிசிமுட் டாது**
**தலைநாள் அன்ன புகலொடு வழிசிறந்து**
**பல நாள் நிற்பினும் பெறுகுவீர்** [12]

கூத்தராற்றுப்படை(561-566)

என்று கூத்தரின் வழியாக ஆற்றுப்படுதுகிறார்.

**ஆற்றல் வெளிப்பாடு:-**

மனித மனம் மிகவும் நுட்பமானது. ஆற்றல் மிக்கது.

ஆற்றுப்படையில் ஆசிரியர்கள் பரிசு பெற்ற ஒருவன் பரிசு பெற நினைக்கும் ஒருவனை இரந்து நில் என்றுக் கூறாது, உம்மிடத்தே இருக்கும் இசைக்கருவிகளினாலும் ஆடல், பாடல் என்ற உமது திறமையால் (ஆற்றலினால்) மன்னன் மனம் மகிழ்ச்சியடையுமாறு செய்து பரிசு பெறுவாயாக என்றே ஆற்றுப்படுத்துகிறார்கள். இவ்வாறே மனித வாழ்வு சிறக்க வழிகாட்டுவது தமிழ் இலக்கியங்களின் தலையாய நோக்கமாகும்.

**முடிவுரை:-**

ஆற்றுப்படை நூல்கள் அல்லாது காலந்தோறும் தோன்றிய அனைத்து இலக்கியங்களையும் அதன் ஆசிரியர்களையும் சிறந்த உளவளத்துணையாக கொண்டு ஆராய்ந்தால் தமிழ்இலக்கியங்களே மருத்துவ உளவியலாகவும் , வழிகாட்டு உளவியலாகவும் விளங்குவதை நம்மால் காணமுடிகிறது அறிவியல் என்ற சொல் அறிந்திராத காலத்திலேயே அதனைப் பற்றி அனைத்துக் கூறுகளும் நம் தமிழ் இலக்கியங்களில் நீக்கமற நிறைந்துள்ளதை அறிந்து தமிழர்களாகிய நாம் பெருமிதம் கொள்வோம்.

**துணைநூல் பட்டியல்**

1, 2, 3 உளவியல்சார் உளவளத்துணை அணுகுமுறை-
ரிட்லி ஐயசிங்க
-தமிழாக்கம் யூ.எல்.எம.நௌபர்

4. கலித்தொகை டாக்டர். மா.இராசமாணிக்கனார்
நெய்தற்கலி -16-பாடல் வரி 6
5. தொல்காப்பியம் புறத்திணையியல் -88
6. கலித்துறைப் பாட்டியல் என்னும் நவநீதப் பாட்டியல்
நவநீத நடனார் இயற்றியது.
பதிப்பாசிரியர்கள் - எஸ்.ஜி. கணபதி ஐயர், எஸ். கல்யாண சுந்தரையர்
7. பத்துப்பாட்டு மூலமும் உரையும் கதிர் முருகு
திருமுருகாற்றுப்படை(62-66)
8. பத்துப்பாட்டு மூலமும் உரையும்
பொருநராற்றுப்படை 73-78
9. பத்துப்பாட்டு மூலமும் உரையும்
சிறுபாணாற்றுப்படை 143-145
10. திருக்குறள் பரிமேலழகர் உரை -குறள் 644
11. பத்துப்பாட்டு மூலமும் உரையும ;பெரும்பாணாற்றுப்படை 491-493
12. பத்துப்பாட்டு மூலமும் உரையும்கூத்தாற்றுப்படை 564-566.